## பாடம்: 7 - நாயிம் ஓநாயும்

**வகுப்பு : III**

**பாடம் : தமிழ்**

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மகிழ்ச்சி - இச்சொல் உணர்த்தும் பொருள்

அ) **இன்பம்** ஆ) துன்பம் இ) வருத்தம் ஈ) அன்பு

2. ஒன்றுமில்லை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) ஒன்று+இல்லை ஆ) **ஒன்றும்+இல்லை**

இ) ஒன்றுமே+இல்லை ஈ) ஒன்று+மில்லை

3. அப்படி + ஆனால் - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) **அப்படியானால்** ஆ) அப்படியனால் இ)அப்படியினால் ஈ) அப்படி ஆனால்

4. விருப்பு என்ற சொல்லின் எதிர்ச்சொல்

அ) **வெறுப்பு** ஆ) கருப்பு இ) சிரிப்பு ஈ) நடிப்பு

**ஆ. வினா விடை.**

**1. பசியால் மெலிந்த ஓநாய் எங்குச் சுற்றித் திரிந்தது?**

பசியால் வாடிய ஓநாய் உணவு தேடிக் காடு முழுவதும் சுற்றித் திரிந்தது.

**2. நாய், ஓநாயை எங்கு வரச் சொன்னது?**

நாய் ஓநாயைக் காட்டைவிட்டு வெளியே வந்து வீட்டுக்காவல் புரிவதற்கு அழைத்தது.

**3. நாயின் கழுத்தில் என்ன இருந்தது?**

நாயின் கழுத்தில் கருப்புப்பட்டை இருந்தது.

**இ. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.**

1. விதவிதமான - வகை வகையான
2. சுதந்திரம் - விடுதலை
3. வருடுதல் - தடவுதல்
4. பிரமாதம் - பெருஞ்சிறப்பு
5. சந்தேகம் - ஐயம்

**ஈ. சரியா தவறா என எழுதுக.**

1.ஓநாய் தின்பதற்கு எதுவும் கிடைக்காமல் மெலிந்திருந்தது. **சரி**

2.நாய் புதியவர்களைக் கண்டால் விரட்டியடிக்காது. **தவறு**

3.ஓநாயின் கழுத்தில் கருப்புப் பட்டை இருந்தது. **தவறு**

4. ஓநாய் சுதந்திரமாக வாழ ஆசைப்படவில்லை. **தவறு**

5.ஓநாயை நாய் வீட்டிற்கு அழைத்தது. சரி

## உ. சரியான சொல்லால் நிரப்புக.

1. நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்?
2. நாயின் கழுத்தில் கருப்புப்பட்டை இருந்தது.
3. வீட்டுக்காரர்கள் நாயை அன்பாக வருடிக்கொடுப்பார்கள்.
4. வீட்டில் மாட்டிக்கொள்வதைவிட சுதந்திரமாகக் காட்டில் அலைவதே மேல்.
5. என்னைத் தயவுசெய்து அழைத்துச் செல் என்று ஓநாய் கூறியது.

## ஊ. சொற்களை இணைத்து எழுதுவோம்.







1. நல்ல புத்தகம்
2. நல்ல எண்ணம்
3. நல்ல உணவு

1. மெலிந்த ஓநாய்
2. மெலிந்த உடல்
3. சத்தம்

## எ. சொல் விளையாட்டு.

ல், பு, க, ர, ல், டி, ட, ரு, ம்

1. கடல்
2. கரடி
3. கரும்பு

வி, க, த, ங், ம், க, லை

1. விலை
2. கலை
3. தங்கம்

பு, ம், ட், ழ, வை, டு ற

1. பறவை
2. பழம்
3. பட்டு

ச, த, ள, ம், த், கு, ள், ந், ட, ம

1. மத்தளம்
2. மகுடம்
3. சத்தம்

## ஏ. சொற்களை முறைப்படுத்திச் சரியான தொடரை உருவாக்குக

எ.கா. சுதந்திரத்தை கொடுக்க என் மாட்டேன் விட்டு என் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க மாட்டேன்

1. கொழு, கொழு அழகையும் புகழ்ந்தது நாயின் உடம்பையும்.

நாயின் கொழு, கொழு உடம்பையும் அழகையும் புகழ்ந்தது.

2. பார்த்தால் வீட்டுக்காரர்களைப் ஆட்ட வாலை வேண்டும்.

வீட்டுக்காரர்களைப் பார்த்தால் வாலை ஆட்ட வேண்டும்.

**ஐ. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.**

எ.கா. நான் என்ன வேலை செய்ய வேண்டும் நான் என்ன வேலை செய்ய வேண்டும் ?

1. ஆகா! என்ன சுகம் தெரியுமா?
2. ஒன்றுமில்லை என்றால், கழுத்தில் எப்படி பட்டை ஏற்பட்டது?
3. என்ன, கட்டிப் போடுகிறார்களா!
4. நம் விருப்பம் போல போக முடியாது. அது என்ன பிரமாதம்?
5. "நல்ல உணவு உனக்கும்" கிடைக்கும் என்று சொன்னது.

**ஒ. சூழலுக்கேற்ற உணர்வைத் தெரிவு செய்க.**

(சிரிப்பு, மகிழ்ச்சி, வருத்தம், வியப்பு, அச்சம்)

1. பாட்டி புத்தாடை வாங்கித் தரும்போது ஏற்படுவது. **மகிழ்ச்சி**
2. மிகப்பெரிய யானையைப் பார்க்கும்போது. **வியப்பு**
3. கோமாளி செய்யும் செயல்களைக் காணும்போது. **சிரிப்பு**
4. நம்முடைய நண்பர் கீழே விழுவதைக் காணும்போது **வருத்தம்**
5. திடீரென எதிரில் பாம்பைக் காணும்போது **அச்சம்**

KOSAVAPATTY KNOWLEDGE IS POWER